

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 12.06.2026


# அன்று பேசியது என்ன? இன்று பேசுவது என்ன?

விஜய் முதலமைச்சர் ஆனது முதல் பாலியல் வன்கொடுமைகள் அதிகம் நடக்கின்றன. இதைத் தடுக்க ஒரு மாதம் கழித்து ‘சிங்கப் பெண் படை’ என்ற திட்டத்தைத் தொடங்கி இருக்கிறார் விஜய். ஆட்சிக்கு வந்ததும் போட்ட முதல் கையெழுத்தை நடைமுறைப்படுத்தவே அவருக்கு முப்பது நாள் ஆகி இருக்கிறது. ஆமை வேகத்தை விட மோசமான வேகத்தில் அவர் ஆட்சி போய்க் கொண்டு இருக்கிறது.

**பெண்கள் பாதுகாப்பைப் பற்றிப் பேசிய விஜய், இதைத் தன்னால் தடுக்க முடியாது என்பதையும் அதே கூட்டத்தில் ஒப்புக் கொண்டு விட்டார். ‘தனிமனித ஒழுக்கம் குறைந்து விட்டதுதான் இதற்குக் காரணம். தனிமனிதர்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும்’ என்று அறிவுரை சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.**

‘நான் பதவியேற்ற அடுத்த நொடி முதல் எந்தக் குற்றச் சம்பவமும் நடக்காது’ என்று சவால் விட்ட விஜய், எதனால் பதுங்குகிறார்? ஏன் நாக்கு வேறு பக்கமாகப் போகிறது?

**தி.மு.க. ஆட்சியின் போது என்னவெல்லாம் பேசினார் விஜய்? “நீங்க ஒழுங்கா ஆட்சி நடத்தி இருந்தால் பெண்கள் பாதுகாப்பு ஒழுங்கா இருந்திருக்கும். சட்டம் ஒழுங்கு ஒழுங்கா இருந்திருக்கும். பச்சை புள்ளைங்க.. படிக்கிற புள்ளைங்க... சின்னப் பொண்ணுங்க... வீட்டுல இருக்கிற பொண்ணுங்க... வேலைக்கு போகிற பொண்ணுங்க... இதுங்க எல்லாருக்கும் நடக்கிற கொடுமைகளை சொல்ல முடியாது சார்” என்று சொன்னீர்களே விஜய்? இப்போது என்ன நடக்கிறது அவரது ஆட்சியில்?**

தி.மு.க. ஆட்சியில் நடந்த சம்பவங்களுக்கு அரசும், முதலமைச்சரும்தான் பொறுப்பு என்று பேசி வெறுப்பை விதைத்த விஜய், இன்று தனது பொறுப்பை தட்டிக் கழிப்பது ஏன்? தனது கையாலாகாத்தனத்தை மறைக்க... ‘ஊரில் உள்ளவர்கள் அனைவரும் திருந்த வேண்டும்’ என்று டயலாக்கை மாற்றிக் கொண்டது ஏன்?

ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த விஜய் ரசிகைக்கு, த.வெ.க. பெண் உறுப்பினருக்கு த.வெ.க. நிர்வாகிகளாலும், அதற்கு ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் சரவணன் துணையாக இருந்ததையும் நாம் நமது தலையங்கத்தில் முன்பே எழுதி இருக்கிறோம்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி, த.வெ.க.வின் முகத்திரையை ‘ஒரு குட்டிஸ்டோரி’யை சமூக வலைதளத்தில் எழுதி இருக்கிறார். அதில் ...

“பாதிக்கப்பட்டவர் ஓர் இளம்பெண். த.வெ.க.வைச் சேர்ந்தவர். அவரிடம் பாலியல் குற்றம் புரிந்தவர்கள் குற்றவாளிகள். அவர்களும் த.வெ.க.வைச் சேர்ந்தவர்கள். இந்தக் குற்றவாளிகளை கேரளாவில் மறைத்து வைத்தவர் ஒரு MLA. இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த த.வெ.க. எம்.எல்.ஏ. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நியாயம் கேட்டுப் போராடியது ஜனநாயக மாதர்சங்கம். குற்றவாளிகளைக் கைது செய்தது த.வெ.க. அரசாங்கம்.. நல்லது. இதுவரை இது ஒரு நீண்ட தொடராக நினைத்துப் படித்திருப்பீர்கள். ஆனால் பாருங்கள்...

பாலியல் குற்றவாளிகளாக மாறியவர்களை த.வெ.க.விலிருந்து அக்கட்சி நீக்கவில்லை. அவர்களைப் பாதுகாத்த த.வெ.க. எம்.எல்.ஏ. மீதும் நடவடிக்கை இல்லை.. அடடா என கவலைப்படுகிறீர்களா?

படாதீர்கள்...

அதற்கு பதிலாக பாதிக்கப்பட்ட, அப்பெண்ணை த.வெ.க.விலிருந்து நீக்கி உள்ளார்கள்...

இது யார் சொன்னது? அந்தப் பெண்ணேதான்..!

ஊர் ஸ்ரீவைகுண்டம் – பெயர் சரவணன் எம்.எல்.ஏ. த.வெ.க.

இது ஒரு ‘குட்டி’ ஸ்டோரி அல்ல...! குட்டீசுகளுக்கான ஸ்டோரியும் அல்ல.

**பெண்கள் குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக ஓடி ஓடி ஊடகங்கள் வாயிலாக உழைத்தவர்கள் இப்போது கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவே இல்லை...!” என்று எழுதி இருக்கிறார் பாலபாரதி. இதுதான் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக விஜய் எடுக்கும் நடவடிக்கைகளின் லட்சணம்.**

பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டும் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுக்காத விஜய்க்கு, சிங்கப் பெண் பாதுகாப்புப் படையைத் தொடங்க அருகதை உண்டா? யார் பாதிக்கப்பட்டாரோ அந்தப் பெண்ணுக்கு ஆறுதலாக இருந்துள்ளாரா விஜய்? இல்லை. ‘என்னிடம் முதலமைச்சர் விஜய் பேச வேண்டும்’ என்று சொல்லி இருக்கிறார் அந்தப் பெண். இதுவரை விஜய் பேசவில்லை.

இந்த விவகாரம் அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆகிய இருவருக்கும் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சேர்ந்து அந்தப் பெண்ணை கட்சியை விட்டு நீக்கிவிட்டார்கள். இதைப் பார்க்கும் போது இந்த ஆட்சியில் யார் முன்வந்து புகார் கொடுப்பார்கள்?

ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ.வை சுதந்திரமாக நடமாட விட்டுவிட்டு, தனிமனித ஒழுக்கம் குறித்து பாடம் எடுக்கலாமா? உண்மைக் குற்றவாளியைக் காப்பாற்றி வைத்துக் கொண்டு சிங்கப் பெண் படையால் என்ன பயன்?

பாலியல் வன்கொடுமையைத் தடுக்கப் போவதாக உண்மையில் நினைத்தால் ஸ்ரீவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் பதவி பறிக்கப்பட்டு அவரும் கைது செய்யப்பட வேண்டும். அதற்கு முதலமைச்சர் விஜய் தயாரா? இதைச் செய்யாமல் பெண் போலீசாருக்கு சீருடையை மாற்றிவிட்டதால் எதுவும் சீராகி விடாது.

சூலூர் விவகாரத்திலும் த.வெ.க. ஆட்சி முறையாக நடக்கவில்லை. 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். முதலில், ‘உங்க குழந்தை உயிரோடு இருக்கிறது’ என்று போலீஸார் அந்தக் குடும்பத்தினரிடம் சொன்னார்கள். பிறகு, ‘குழந்தை இறந்து விட்டது’ என்று சொன்னார்கள். சிறுமியின் அம்மாவுக்குத் தெரியாமல் சிறுமியின் உடலை சேலத்துக்குக் கொண்டு வந்து எரித்துவிட்டார்கள். இதை எல்லாம் சிறுமியின் அம்மா பேட்டியாகக் கொடுத்தார். உடனே அந்த அம்மா மீதே தவறான செய்திகள் பரப்பப்பட்டது. விஜய் வாரியர்ஸ், சமூக வலைதளங்களில் சிறுமி குறித்தும், அவரது அம்மா குறித்தும் எழுதியவை அருவெறுப்பானவை. ‘என்னைப் பத்தி வரும் விமர்சனங்களை நீங்க பார்த்துக்கோங்க’ என்று திருச்சி கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் பேசினார். அவரது தூண்டுதலால், ஆசீர்வாதத்தால் அந்தக் குடும்பமே கொச்சைப்படுத்தப்பட்டது. இதையெல்லாம் பார்த்து யாராவது புகார் கொடுக்க முன் வருவார்களா?

**சூலூர், ஸ்ரீவைகுண்டம் ஆகியவை இரண்டும் விஜய் ஆட்சி மிகமிக மோசமான ஆட்சி என்பதற்கு உதாரணங்கள் ஆகும். இந்த ஆட்சியில் பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்காது. அதனால்தான் தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் வகையில், ‘தனிமனித ஒழுக்கம் முக்கியம்’ என்று தத்துவம் பேசத் தொடங்கி இருக்கிறார் விஜய்.**

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் பா.பெஞ்ஜமின் கழகத்தில் இணைந்தார்!

## திருவள்ளூர் மத்திய மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளும் இணைந்தனர்!









**சென்னை, ஜூன் 12–**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட முன்னாள் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான பா. பெஞ்ஜமின் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி செயலாளர் யாமினி இளையராஜா – மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் தினேஷ் – 155வது வட்டக் கழக செயலாளர் ராஜ்குமார் பச்சையப்பன், மத்திய மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் இளையராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (10.6.2026) மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட முன்னாள் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான பா.பெஞ்ஜமின் அவர்கள் தலைமையில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி செயலாளர் யாமினி இளையராஜா – மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் தினேஷ் – 155வது வட்டக் கழக செயலாளர் ராஜ்குமார் பச்சையப்பன், மத்திய மாவட்ட இளைஞரணி துணை செயலாளர் இளையராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏ., சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ., செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் கணபதி, முன்னாள் எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி ஆகியோர் உடனிருந்தனர்.

## முதல்வர் பார்வைக்குப் போகும் முன்பே

# உளவுத்துறை அறிக்கையை படிக்கத் துடிக்கும் மூவர்!

## அதிகாரிகள் அதிர்ச்சி!

**சென்னை, ஜூன் 12 –**

**முதலமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் ரகசிய அறிக்கையை அவர் பார்ப்பதற்கு முன்னதாகவே அவரது வியூக வகுப்பாளர், மூத்த அமைச்சர் மற்றும் முதல்வரின் பாதுகாப்புப் பிரிவு உயரதிகாரி ஒருவர் என மூன்று பேர் அந்த ரகசிய அறிக்கையை பார்த்து விடுகின்றனர். இது நடைமுறைக்கு மாறாக உள்ளது. ரகசியங்கள் கசியவும் வாய்ப்புள்ளது என்றும் இதனால் உளவுத் துறை அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர் என்றும் தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அமைச்சர்கள், அதிகாரிகளை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள, சிறப்புக் குழு தரும் அறிக்கையை, முதல்வர் விஜய் படிப்பதற்கு முன்பே, அவரது வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக்கிய சாமி பார்வையிடுவதால், உளவுத் துறை அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்து உள்ளனர்.

தமிழகத்தில், தமிழக வெற்றிக் கழகம் தலைமையில் கூட்டணி ஆட்சி நடக்கிறது. த.வெ.க., அமைச்சர்கள் உட்பட அனைத்து அமைச்சர்களையும் கண்காணிக்க, காவல் துறையின் உளவுப் பிரிவு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

இது குறித்து, காவல் துறை வட்டாரங்கள் கூறியதாவது: அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும், உளவுத் துறை வாயிலாக கண்காணிப்பது வழக்கமான நடவடிக்கை தான். அதன் படி, முதல்வராக இருப்பவருக்கு, உளவுத் துறை ஐ.ஜி., வழியாக இந்த கண்காணிப்பு அறிக்கை, வாரம் ஒருமுறை அல்லது மாதம் இரு முறை சமர்ப்பிக்கப்படும்.

இதன் வாயிலாக, அமைச்சர்களின் நடவடிக்கைகள் அனைத்தையும், முதல்வர் தெரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில், புதிதாக பொறுப்பேற்றிருக்கும் த.வெ.க., அரசில், அமைச்சர்கள், உயர் அதிகாரிகளை கண்காணிக்க, புதிதாக சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு அளிக்கும் அறிக்கைகள், முதல்வர் விஜய் மேஜைக்கு தான் முதலில் அனுப்பி வைக்கப்பட்டன.

அந்த நடைமுறை தற்போது மாறி விட்டது. அதாவது, முதல்வரின் தனிப்பட்ட வியூக வகுப்பாளரான ஜான் ஆரோக்கியசாமி, தற்போது தலைமைச் செயலகத்துக்கு அடிக்கடி வருகிறார். அதன்படி, முதல்வர் பார்வைக்கு உளவுத் துறை அறிக்கை செல்லும் முன்பாக, அதை ஜான் பார்வையிட உத்தரவிடப்பட்டுள்ளது.

சில தகவல்களுக்கு நேரடியாக உளவுத் துறை உயர் அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கிறார். அதேபோல், சீனியர் அமைச்சர் ஒருவரும், முதல்வரின் பாதுகாப்பு பிரிவில் உள்ள உயர் அதிகாரியும், உளவு அறிக்கையை, ‘வாட்ஸாப்’ வாயிலாக அனுப்பச் சொல்லி கேட்கின்றனர்.

சட்ட ரீதியாக, முதல்வர் அல்லது அரசு நியமித்த அவரது உதவியாளர் பார்வைக்குச் செல்லும் முன்பாக, உளவுத் துறை அறிக்கையை வேறு யாரும் பார்க்கக் கூடாது. தற்சமயம் வரை, முதல்வருக்கு உதவியாளர் நியமிக்கப்படவில்லை. எனவே, முதல்வரின் பார்வைக்கு தான் அறிக்கை முதலில் செல்ல வேண்டும்.

ஆனால், அந்த நடைமுறையை, குறுக்கே புகுந்து பலரும் கெடுக்கின்றனர். முதல்வர் விஜய் பார்வைக்கு போகும் முன்னரே உளவுத்துறை அறிக்கையை படிக்கத் துடிக்கும் மூவரணியால், அரசின் ரகசியங்கள் கசிய அதிக வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அந்த நாளிதழில் செய்தி வெளியாகி உள்ளது.

## அரசு அலுவலகங்களில் அத்துமீறி நுழைந்து ஆய்வு என்ற பெயரில் அச்சுறுத்தி வரும்

# த.வெ.க.வினர் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கண்டனம்!

*விழுப்புரம், ஜூன் 12 -*

விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு :-

அரசு அலுவலகங்களில் அத்துமீறி நுழைந்து , ஆய்வு என்ற பெயரில் அரசு அலுவலர்களை அச்சுறுத்தி அவர்களின் பணிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் செயல்களில் ஆளும் கட்சி நிர்வாகிகள் என்கிற அதிகாரத் துடன் தமிழக வெற்றிக் கழகத்தினர் தமிழகம் முழுவதும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த அதிகார அத்துமீறல் தற்போது எல்லை மீறி அரசு பள்ளியில் அனுமதியின்றி நுழைந்து வகுப்பறையில் மாணவர்களிடம் அவர்கள் கட்சியை பற்றி பிரச்சாரம் செய்யுமளவிற்கு சென்றுள்ளது.

**வகுப்பறைக்குள் ரீல்ஸ் எடுக்கும் த.வெ.க.வினர்!**

கடந்த 09.06.2026, செவ்வாய்க்கிழமை அன்று, விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட காணை ஊராட்சி ஒன்றியம், மாம்பழப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சென்ற தமிழக வெற்றிக் கழகத்தின் காணை தெற்கு ஒன்றிய செயலாளர் ஜான் பீட்டர் மற்றும் மாம்பழப்பட்டு கிராமத்தை சேர்ந்த த.வெக. வினர் பள்ளியின் தலைமை ஆசிரியர் ( பொறுப்பு ) தினகரனிடம் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.



தொடர்ந்து கல்வித்துறையினர் அனுமதி இல்லாமல் அத்துமீறி வகுப்பறைகளுக்குள் நுழைந்து ஆய்வு என்ற பெயரில் மாணவர்களிடம் அரசியல் குறித்து பேசியதோடு வகுப்பறைக்குள் ரீல்ஸ் எடுத்தும் வெளியிட்டுள்ளனர்.

**எந்த அரசுப் பொறுப்பிலும் இல்லாதவர்களின் போக்கு மிகவும் ஆபத்தானது!**

எந்த அரசுப் பொறுப்பிலும் இல்லாதவர்களின் இத்தகைய போக்கு மிகவும் ஆபத்தானது. குறிப் பாக கல்வித்துறையில் இத்தகைய விதிமீறல்கள் தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்பதுடன் அரசு கல்வி நிலையங்களை அரசியல் மேடைகளாக மாற்றும் ஆளும் த.வெ.க. வினரின் செயலுக்கு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு வகுப்பறைகளுக்குள் அனுமதியின்றி நுழைந்த த.வெ.க. ஒன்றிய செயலாளர் ஜான் பீட்டர் உள்ளிட்டவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகள் எடுக்க பள்ளிக் கல்வித்துறையை கேட்டுக் கொள் கிறது.

மேலும் இதுபோன்ற அதிகார அத்துமீறல்கள் அரசின் எந்த துறையிலும் தொடராத வகையில் த.வெ.க. வினர் மீது தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.